# ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி

## ஐந்தாம் திருமொழி - மன்னு பெரும்புகழ்
## எம்பெருமானைக் கூவி அழைக்கும்படி குயிலை வேண்டுதல்

** மன்னு பெரும்புகழ் மாதவன் * மாமணி
வண்ணன் மணிமுடி மைந்தன்
தன்னை * உகந்தது காரணமாக * என்
சங்கிழக்கும் வழக்குண்டே? **
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப் *
பொதும்பினில் வாழும் குயிலே! *
பன்னி எப்போதும் இருந்து விரைந்து * என்
பவளவாயன் வரக் கூவாய் 1

வெள்ளை விளி சங்கு இடங்கையில் கொண்ட *
விமலன் எனக்குருக் காட்டான் *
உள்ளம் புகுந்து என்னை நைவித்து * நாளும்
உயிர்ப்பெய்து கூத்தாட்டுக் காணும் **
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக் *
களித்திசை பாடும் குயிலே! *
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது * என்
வேங்கடவன் வரக் கூவாய் 2

மாதலி தேர் முன்பு கோல் கொள்ள * மாயன்
இராவணன் மேல் * சரமாரி
தாய்தலை அற்றற்று வீழத் * தொடுத்த
தலைவன் வரவெங்கும் காணேன் **
போதலர் காவில் புது மணம் நாறப் *
பொறி வண்டின் காமரம் கேட்டு * உன்
காதலியோடுடன் வாழ் குயிலே! * என்
கருமாணிக்கம் வரக் கூவாய் 3

என்புருகி இனவேல் நெடுங்கண்கள் *
இமை பொருந்தா பல நாளும் *
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் *
தோணி பெறாதுழல்கின்றேன் **
அன்புடையாரைப் பிரிவுறு நோய் * அது
நீயும் அறிதி குயிலே! *
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப் *
புண்ணியனை வரக் கூவாய் 4

** மென்னடை அன்னம் பரந்து விளையாடும் *
வில்லிபுத்தூர் உறைவான் தன் *
பொன்னடி காண்பதோர் ஆசையினால் * என்
பொருகயற் கண்ணிணை துஞ்சா **
இன்னடிசிலொடு பால் அமுதூட்டி *
எடுத்த என் கோலக் கிளியை *
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே! *
உலகளந்தான் வரக் கூவாய் 5

எத்திசையும் அமரர் பணிந்தேத்தும் *
இருடீகேசன் வலி செய்ய *
முத்தன்ன வெண்முறுவல் செய்ய வாயும் *
முலையும் அழகழிந்தேன் நான் **
கொத்தலர் காவில் மணித்தடம் * கண்படை
கொள்ளும் இளங்குயிலே! * என்
தத்துவனை வரக் கூகிற்றி ஆகில் *
தலை அல்லால் கைம்மாறிலேனே 6

பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப் *
புணர்வதோர் ஆசையினால் * என்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து *
ஆவியை ஆகுலம் செய்யும்
அங்குயிலே! ** உனக்கென்ன மறைந்துறைவு? *
ஆழியும் சங்கும் ஒண்தண்டும் *
தங்கிய கையவனை வரக் கூவில் நீ *
சாலத் தருமம் பெறுதி 7

சார்ங்கம் வளைய வலிக்கும் * தடக்கைச்
சதுரன் பொருத்தம் உடையன் *
நாங்கள் எம்மில் இருந்து ஒட்டிய கச்சங்கம் *
நானும் அவனும் அறிதும் **
தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும் *
சிறு குயிலே! * திருமாலை
ஆங்கு விரைந்தொல்லை கூகிற்றி ஆகில் *
அவனை நான் செய்வன காணே 8

பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர் *
பாசத்தகப்பட்டு இருந்தேன் *
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில் வாழ் குயிலே! *
குறிக்கொண்டு இது நீ கேள் **
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல் *
பொன்வளை கொண்டு தருதல் *
இங்குள்ள காவினில் வாழக் கருதில் *
இரண்டத்தொன்றேல் திண்ணம் வேண்டும் 9

அன்றுலகம் அளந்தானை உகந்து *
அடிமைக்கண் அவன் வலி செய்ய *
தென்றலும் திங்களும் ஊடறுத்து * என்னை
நலியும் முறைமை அறியேன் **
என்றும் இக்காவில் இருந்திருந்து * என்னைத்
ததர்த்தாதே நீயும் குயிலே! *
இன்று நாராயணனை வரக் கூவாயேல் *
இங்குற்று நின்றும் துரப்பன் 10

** விண்ணுற நீண்டு அடி தாவிய மைந்தனை *
வேற்கண் மடந்தை விரும்பி *
கண்ணுற என் கடல் வண்ணனைக் * கூவு
கருங்குயிலே! என்ற மாற்றம் **
பண்ணுறு நான்மறையோர் புதுவை மன்னன் *
பட்டர்பிரான் கோதை சொன்ன *
நண்ணுறு வாசக மாலை வல்லார் * நமோ
நாராயணாய என்பாரே 11

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

---